# ஜாமக்காரன்
# JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15


**VOLUME - 5 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 1**
**JANUARY 2021 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333** இந்த எண். **SMS** உபயோகத்துக்காக மட்டும்
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com


ஜா ம க் கா ர ன் JAMAKKARAN



கர்த்தருக்குள் அன்பான வாசகர்களுக்கு,

உங்கள் யாவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்

இந்த ஜாமக்காரன் 2021 பெப்ருவரி மாத கடைசியில் உங்கள் கைகளில் கிடைக்கும் என்று நம்புகிறேன். இம்முறையும் டிசம்பர் – ஜனவரி மாத ஜாமக்காரன் இரண்டு பத்திரிக்கையும் ஒரே கவரில் வைத்து உங்களுக்கு அனுப்பப்படுகிறது.

**வெளிநாட்டில்** வாழும் வாசகர்கள் www.jamakaran.com என்ற என் வெப்சைட்டில் ஜாமக்காரனை வாசித்துக்கொள்ளலாம். என் பாடல்களையும் கேட்கலாம். **விமான சேவை** தொடங்கினால் உங்கள் பழைய விலாசத்துக்கு ஜாமக்காரன்அனுப்பிவைக்கப்படும்.

## குடியரசு தின வாழ்த்துக்கள்





இந்தியா சுதந்திரம் அடைந்தாலும் இந்திய சட்டங்கள் முறைப்படுத்தப்படவில்லை. எனவே 1950ம் ஆண்டு இந்திய சட்டம் அம்பேத்கார் போன்ற சட்ட வல்லுனர்களால் இயற்றப்பட்டு அறிமுகப்படுத்தியபின் ஜனாதிபதி, பிரதமர் ஆகிய பதவிகளுக்கு தலைவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு இந்திய அரசாங்கம் இயங்கின. அந்த ஆரம்ப

# JANUARY - 2021

நாள் ஜனவரி 26ம் தேதி குடியரசு நாளாக கொண்டாடப்படுகிறது. பல லட்ச மக்கள் காஷ்மீரிலிருந்து – கன்னியாகுமரி வரை பல ஆயிரம் பாஷைகள், பல அயிரம் மதங்கள், பல இன மக்கள் ஒன்று சேர்ந்து போராடி, உயிர் தியாகங்கள் செய்து, சிறை தண்டனைகள் அனுபவித்து பெற்ற சுதந்திர இந்தியாவை, இந்திய மக்களாலேயே அளுகை செய்த இந்த குடியரசு தின நாளை நினைவு கூறுவோம். நம் இந்திய மக்களுக்கு வாழ்த்துதல். இந்தியாவை ஆளுகிறவர்களுக்கும் வாழ்த்து கூறுகிறேன்.

---

அன்பானவர்களே!

கடந்த 2020ம் வருடம் உங்களில் பலர் பலவித பிரச்சனைகள் வழியாக கடந்து வந்திருப்பீர்கள். அவைகள் யாவும் உங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தை பாதித்திருக்கும். மனம் தளர்ந்துபோக வேண்டாம். நாம் ஆராதிக்கும் தெய்வம் ஜீவிக்கிறவரும், அண்ட சராசரங்களையும் உண்டாக்கிய சர்வ வல்லமை உள்ளவராகும். அவர் உங்கள் பிரச்சனைகள் எதுவானாலும் அதிலிருந்து உங்களை விடுவித்து உங்களை காக்க வல்லவர். உங்கள் துக்கத்துக்கும் உங்கள் பிரச்சனைக்கும் நிச்சயம் முடிவுண்டாக்குவார். உங்களோடு சேர்ந்து நானும் உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

உங்கள் எல்லா ஜெபக் குறிப்புகளுக்கும், கடிதம் மூலமும், email மூலமாகவும் தொலைபேசி வழியாகவும் நீங்கள் எனக்கு அறிவித்த எல்லா ஜெப குறிப்புகளையும் நான் எழுதி வைத்து நன்றாக ஜெபிக்க முடியும். முன்பு மாதம் இரண்டுமுறை அல்லது மாதம் ஒரு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . **கெரோனா செய்த நன்மையால்** 24 மணி நேரமும் **நான் வீட்டிலேயே இருக்கிறபடியால்** இரவும் பகலும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவசரம் இல்லாமல் ஒவ்வொரு குறிப்புக்காகவும் ஜெபிக்க முடிகிறது. விலாசம் அனுப்பியவர்களுக்கு தபாலில் பதிலையும், தொலைபேசி நெம்பருடன் எழுதிய ஜெப குறிப்புகளுக்கும், காணிக்கை அனுப்பியவர்களுக்கும் **தொலை பேசியிலேயே** ஆலோசனை கூறி மறுபக்கத்தில் உள்ளவர்களிடம் ஸ்பீக்கரில் போட சொல்லி வீட்டில் உள்ள அனைவரும் கேட்கதக்கதாக தொலைபேசியிலேயே ஜெபித்து விடுகிறேன்.

அப்படி ஜெபிப்பது மிகவும் திருப்தியாகவும் பிரயோஜனமாகவும் இருந்ததாக ஏராளமானவர் அறிவித்துள்ளார்கள். நான் இன்னும் 6 மாதங்கள் வெளியில் எங்கும் பிரயானம் செய்யக்கூடாது, குறிப்பாக AC ரயில்களில், AC பஸ்களில் பிரயாணம் செய்ய கூடாது என்று அறிவுறித்தியுள்ளார்கள். ஆகவே வீட்டில் இருந்து ஜெப ஊழியம், ஆலோசனை ஊழியம் வேதத்தில் உள்ள சந்தேகங்களுக்கு வசனத்தை எடுக்கச்சொல்லி

வசனத்தை சுட்டிக்காட்டி **தொலைபேசியிலேயே** வாசிக்க சொல்லி சந்தேகங்களை தெளிவாக்கி விளக்கி கூறுகிறேன்.

பலருக்கு நான் தொலைபேசியில் ஆலோசனை கூறுவது ஒரு கன்வென்ஷனில் பிரசங்கம் கேட்டது போல் இருக்கிறது என்று அவர்கள் கூறும்போது நான் மிகுந்த சந்தேஷத்தோடு கர்த்தரை துதிக்கிறேன். வெளியில் **சபை கன்வென்ஷனுக்கு,** கிராம **சுவிசேஷ ஊழியத்துக்கு** என்னால் போக முடியவில்லையே என்ற **ஏக்கம்** தொலைபேசி, கைபேசி மூலம் உங்களோடு பேசுவதினாலும் ஜெபிப்பதினாலும் கொரோனாவுக்கு முன் செய்த ஊழிய திருப்தியை எனக்கு அளிக்கிறது.

இந்த 2021ம் வருடம் உங்கள் வாழ்கையில், உங்கள் குடும்பத்தில் ஒரு பெரும் ஆவிக்குரிய சந்தோஷம் பெருகுவதாக. சங்கீதக்காரன் இப்படி ஜெபிக்கிறார். கர்த்தாவே ! **நாங்கள் துன்பத்தை கண்ட வருடங்களுக்கு சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்** என்று சங். 90:15ல் கெஞ்ஜி ஜெபிக்கிறான்.

அன்பானவர்களே ! நாம் இந்த உலகத்தில் வாழும் நாளெல்லாம் பலவித புது பிரச்சனைகள் **வந்து வந்து** போகும். ஒரு **கொரோனா** வாதை போனால் அதே கொரோனா வேறொரு புதிய ரூபமெடுத்து மற்றொரு **கொரோனா** தொற்று முன்பைவிட அதிவேகமாக பரவுகிறது,. அதை தொடர்ந்து **பறவை** காய்ச்சல், **எலி** காய்ச்சல் இப்படி பலவிதத்தில் தாக்கப்படுகிறோம்.

இவைகள் யாவும் கடைசி கால வருகையின் **அடையாளங்கள்** அல்ல, **அவைகள் எச்சரிப்புகள்** ஆகும்.

எரே. 51:46ல் ஒரு வருடத்திலே **ஒரு செய்தி** கேட்கப்பட்டு பின்பு மறு வருஷத்திலே **வேறு செய்தி** கேட்கப்படும். இப்படி மாறி மாறி பல பிரச்சனைகள் வருவதுதான் உலகத்தின் இயல்பு.

மேலும் தேசத்தில் கொடுமை உண்டாகும், ஆளுகிறவன் மேல் ஆளுகிறவன் வருவான் என்கிறார் தீர்க்கதரிசி.

............ இதோ விக்கிரகங்களை (விக்கிரகங்களை வணங்குகிறவர்கள் என்று அர்த்தம்) தண்டிக்கும் நாட்கள் வரும். அப்போது தேசமெல்லாம் கலங்கும் என்று உறைக்கிறான்.

தீர்க்கதரிசியானவர் மேலே கூறிய தீர்க்கதரிசனம் **இஸ்ரவேல்** ஜனங்களுக்கு மட்டுமல்ல நமக்கும் அது பொருந்தும். இப்போதும் அதைப்போல பிரச்சனைகளைத்தான்

நாமும் விதவிதமாக சந்தித்துக்கொண்டிருக்கிறோம். இப்போது இந்த இக்கட்டான சூழ்நிலையில் நாம் செய்ய வேண்டியது என்ன? **மனம் திரும்பி** உண்மையுள்ள தெய்வமான **இயேசு கிறிஸ்துவை** நோக்கி வேண்டுதல் செய்ய வேண்டும். அதோடு வசனம் என்ன **சொல்லுகிறதோ** அதன்படி ஜீவிக்க வேண்டும்.

## விக்கிரக ஆராதனையின் பெருக்கம்

வாசகர்கள் மற்றொரு முக்கிய செய்தியாக அறிய வேண்டியது. **மாதா TV** கிறிஸ்தவ **சேனல்** மூலமாக பிசாசு ஜனங்களை மிகவும் வஞ்ஜிக்கிறான். குறிப்பாக C.S.I. லூத்தரன், பெந்தேகோஸ்தே சபை மக்களை கவரும் வகையில் இயேசுவை மையப்படுத்தி நல்ல பிரசங்கம் நடத்துகிறார்கள். **புது புது நிகழ்ச்சிகளையும்** நல்ல பாடல்களையும் ஒளிபரப்பி கடைசியில் **பரிசுத்த மரியாளே எங்களை இரட்சிக்க வேண்டும்** என்று முடிக்கிறார்கள். நிறைய கத்தோலிக்க சபைகளில் நடுவில் இருந்த **மரியாள்** சிலையை ஓரத்தில் வைத்தவிட்டு **இயேசுவின் சிலுவை காட்சி சிலையை** வைத்து அதற்கு தூபம் காட்டி ஆராதிக்கிறார்கள். முடிவில் மரித்த மரியாளோடு ஜெபித்து முடிக்கிறார்கள். இது பிழையான ஆராதனை மட்டுமல்ல கர்த்தர் வெருக்கும் விக்கிரக ஆராதனையாகும்.

CSI லூத்தரன் ஆராதனைகளிலும் பல சடங்குகள் புதியதாக வந்துவிட்டது. **குத்து விளக்குகளை** விக்கிரமாக்கி ஆராதனை மேடையை அலங்கரிக்கிறார்கள்.

இன்றைக்கும் திருநெல்வேலி, தூத்துக்குடியில் உள்ள சில CSI ஆலயங்களில் பிரசங்க பீடத்தின் அருகே மிக **உயரமான குத்துவிளக்கை** வைத்து அதை எரியவிடுகிறார்கள். ஆலயத்துக்கு வரும் பழைமைவாதிகள் **குத்துவிளக்கில்** உள்ள எண்ணெய்யை தொட்டு நெற்றியில் **சிலுவை அடையாளம்** போட்டுக்கொண்டு **குழந்தையின் நெற்றியிலும்** சிலுவையை வரைகிறார்கள்.

- ☐ **பெந்தேகோஸ்தே** சபைகளோ **அன்னிய பாஷை** பெயரில் உளருவதை ஆராதனையின் **விக்கிரமாக்கி** ஆராதனை நடத்துகிறார்கள்.

## இப்படி பல விஷயங்களை மறைமுகமாக விக்கிரகமாக்கி ஆராதனை நடத்துகிறார்கள்.

ஒரு **ஆங்கில பத்திரிகையின்** தலைப்பு கீழ்கண்டவாறு இருந்தது.

கர்த்தாவே ! **எங்கள் கிறிஸ்தவர்களை** அவரவர்கள் **சபைகளிலிருந்து காப்பாற்றும் இந்த ஜெப தலைப்பு எனக்கு ஆச்சரியத்தை கொடுத்தது**

☐ உபதேசத்தில் பூரணப்பட்ட சபைகள் உலகத்தில எங்கும் இல்லை. உபதேச விஷயத்தில் குறையில்லாத சபைகளே இல்லை என்றும கூறலாம்.

பல சபைகள் தங்கள் சபை **உபதேசங்களையே** விக்கிரமாக்கி ஆராதிக்கிறார்கள். இவர்கள் **சாட்சியுள்ள** ஜீவியத்தை வலியுறுத்துவதில்லை **சாட்சியுள்ள** ஜீவியத்தில்தான் நாம் **இயேசுவை மற்றவர்களுக்கு** காண்பிக்க முடியும்.

☐ **விக்கிரகம்** என்பது **சிலை** மட்டுமல்ல நாம் நம் சொந்த வாழ்க்கையில் கிறிஸ்துவைவிட எதை அதிகமாக மையப்படுத்துகிறோமோ அவைகள் யாவும் **விக்கிரகமே !**

ஒருவன் தன் மனைவியையோ, மகளையோ, தகப்பனையோ **என்னைவிட** அதிகமாக நேசிப்பவன் **எனக்கு பிரயோஜனமானவனல்ல** என்று இயேசு கூறினார். மத்.10:37, மேலே குறிப்பிட்டவர்களை **நேசிக்கக்கூடாது** என்று இயேசு கூறவில்லை. **என்னைவிட** என்ற வார்த்தையை உபயோகிக்கிறார். அதாவது எனக்கு **கொடுக்க வேண்டிய இடத்தில்** மகனையோ மகளையோ வைத்து அதிகம் நேசித்தால் அந்த மகன் மகள், தாய், தகப்பன் யாவரும் **விக்கிரமாகிவிடுகிறார்கள்.** அதனால்தான் கர்த்தர் கூறினார். மகனே **உன் முழு இருதயத்தை** எனக்கு கொடு என்றார். உன் **தேவனாகிய கர்த்தரை** உன் **முழு இருதயத்தோடும்,** உன் முழு **ஆத்துமாவோடும்** அன்பு கூறுவதே **பிரதான கற்பனை** என்று கர்த்தர் கூறுகிறார்.

ஆகவே கர்த்தருக்கு நாம் **முழு இருதயத்தைகொடுக்காமல்** எதை முக்கியத்துவம் படுத்தினாலும் அவைகள் யாவும் **விக்கிரக ஆராதனைக்கு சமம்.**

மரித்த சகோ. DGS தினகரன் கோயமுத்தூர் காருண்யா வளாகத்தில் கட்டிய **வானத்தின் வாசல்** என்று அழைக்கப்படும் இடத்தில் அங்கு குளத்தின் நடுவே **தேவ தூதன்** சிலை வைத்துள்ளார். அங்கு செல்லும் நிறைய கிறிஸ்தவர்கள் அதில் காணிக்கை போடுகிறார்கள். உல்லாச யாத்திரை என்ற பெயரில் டூர் ஏற்பாடு செய்து திருநெல்வேலியிலிருந்து, பாண்டிச்சேரி, வேளாங்கண்ணி, கோயமுத்தூர் **வானத்தில் வாசல்** என்ற **பெதஸ்தா** குளத்தையும் வரிசையாக பார்த்து தொழுதுகொண்டு அங்கு காணிக்கைகளையும் இறைத்து விட்டுபோகும் CSI கிறிஸ்தவர்கள் பலரை நான் அறிவேன். இவர்களெல்லாம் மறைமுக **விக்கிரக ஆராதனைக்காரர்கள், அற்புதங்கள்** அடையாளங்களை மட்டும் எதிர்பார்த்து வருபவர்கள்.

**வேளாங்கண்ணி** தேவாலயத்துக்கு இந்திய தேசத்தின் பல பகுதியிலிருந்து மக்கள் திரண்டு வருகிறார்கள். அதில் நம் CSI, லூத்தரன் சபை கிறிஸ்தவர்களும் சென்று **நேர்சை**

நேர்ந்து காணிக்கையும் போட்டு வந்தபின் தாங்கள் நினைத்த காரியம் நடந்தது, சீக்கிரத்தில் சுகமும் பெற்றேன் என்று சாட்சி எழுதி வைத்துள்ளார்கள். **வேளாங்கண்ணி** மாதா கோவில் டிரஸ்ட் ஆட்கள் அவர்கள் எழுதிய **சாட்சிகளை பொது மக்கள்** பார்வைக்காக அங்கு வைத்துள்ளார்கள். **கத்தோலிக்கர்**தான் தவறான உபதேசத்தில் அகப்பட்டுள்ளார்கள் என்றால் CSI லூத்தரன் கிறிஸ்தவர்களும் **மரியாள் சொரூபத்தையம்** ரோசரி **(ஜெபமாலையும்)** வாங்கி **காரில் முன் கண்ணாடியில்** தொங்கவிட்டு ஒவ்வொரு முறை வீட்டைவிட்டு காரில் புறப்படும்போதும் **ஜெப மாலையை** தொட்டு வணங்கிவிட்டுதான் காரை ஓட்டுகிறார்கள்.

நம் தேவன் உலகத்தின் ஆரம்பம் முதலே **விக்கிரக வணக்கத்தை** வெறுகிறார் என்பதை ஆதியாகமத்திலிருந்தே வாசித்து வருகிறோம் என்றாலும் பல வீடுகளில் **இயேசுவின்** படம் **மரியாள்** சிலை, **அந்தோனியர்** படம் வைத்து **மாலை போட்டு விக்கிர வணக்கம்** செய்து கர்த்தரை கோபப்படுத்துகிறார்கள்.

☐ மேலும் **மரியாள்** செத்துப்போனவள். **அவர் பரிசுத்தமுள்ளவர்** என்றாலும் அவள் **செத்துப்போனவளாயிற்றே!** செத்துபேனவர்கள் நம்மை காணமுடியாது, நாம் பேசுவதை கேட்கமுடியாது. எந்த அற்புதத்தையும் அவர்களால் செய்ய முடியாது. பிர. 9:15. யோபு 14:1, சங். 30:8, 88:10, 115:7, உபா. 18:11 அகிய வசனங்களில் **செத்துப்போனவர்கள் எந்த அற்புதத்தையும்** செய்யமுடியாது என்று தெளிவாக எழுதப்பட்டது.

ஆனால் **பிசாசு செத்துப்போனவர்கள் ரூபத்தில்** அல்லது செத்துப்போனவர்கள் பெயரில் **அற்புதம் செய்யும்.** பிசாசுக்கும் அதற்கான **வல்லமையை** கர்த்தர் அவைகளை சிருஷ்டிக்கும்போது கொடுத்திருக்கிறார். ஆனால் கர்த்தருக்கு உள்ளது **சர்வ வல்லமையாகும்.** வல்லமைக்கும் – சர்வ வல்லமைக்கும் உள்ள வித்தியாசத்தை விளங்கிக்கொள்ளவேண்டும்.

## மாதா TV ஜாக்கிறதை

**ஜெப மாலையை** விலைக்கு வாங்கி சென்றவர்களுக்கு உணடான **அற்புதங்களை** மாதா TVயில் **சாட்சியாக** அறிவிக்கிறார்கள் அதை **மாதா TVயில்** பார்க்கிற விசுவாசத்தில் பெலப்படாத கிறிஸ்தவர்களும், கத்தோலிக்கர் அல்லாத சபையினரும் **சாட்சியை கேட்டு** ஏமாந்து அந்த **ஜெப மாலையை** விலைக்கு வாங்கி வைத்துக்கொள்கிறார்கள். இப்படி பல விதங்களில் பிசாசு கிறிஸ்தவ மக்களை **மாதா TV** மூலம் மயக்கி ஏமாற்றுகிறான்.

☐ மாதா TVயில் **சம்பாஷனை** நிகழ்ச்சி ஒன்றை நானே பார்த்தேன். **பிஷப்மார்கள்.** கத்தோலிக்க **ஆயர்கள்** ஒரு பக்கம் உட்கார்ந்திருக்க மறுபக்கம் கத்தோலிக்க சபை அங்கத்தினர்கள் உட்கார்ந்து இருக்க **நடுவராக** ஒரு ஆயர் விசுவின் பட்டிமன்றம்போல சபையினரை **கேள்வி கேட்கச் சொல்லி** நிகழ்ச்சியை ஆரம்பித்து வைக்கிறார். அதில் ஒருவர் தைரியமாக கேள்வி ஒன்றை கேட்டார்.

**கேள்வி : செத்துப்போனவர்கள்** யாராயிருந்தாலும் அவர்கள் எந்த **அற்புதமும்** செய்யமுடியாது என்பதை வேதத்தின் சில வசனங்களால் நாம் அறிகிறோம். அப்படியிருக்க நாம் செத்துப்போன **பரிசுத்த மரியாளுடன்** ஏன் ஜெபம் ஏறெடுக்கிறோம்? **இயேசு மட்டுமே** உயிருள்ளவர் என்றும் நாம் அறிவோம். ஆக பரிசுத்த **மேரி மாதா தெய்வமா ? இயேசு தெய்வமா ?** என்று கேள்வி கேட்டவுடன் பிஷப், ஆயர்கள் **அதிர்ந்து** போனார்கள். TV சம்பாஷனை **லைவாக போகிறது,** அவர்கள் **சமாளிக்க முடியாமல்** உண்மையை கூறிவிடுகிறார்கள். முதலில் பிஷப், பிறகு **ஃபாதர்** இரண்டுபேர் ஒருவர்பின் ஒருவராக பதில் கூறினார்கள்.

**மரியாள் தெய்வமல்ல,** நாம் மரியாளுக்கு **மரியாதைத்தான்** செலுத்துகிறோம் அது மரியாளை தெய்வமாக **வணங்குவதாகாது. கிறிஸ்து** மட்டுமே **தெய்வம்** நம் ஆலயத்தில் அந்த ஆராதனைதான் நடக்கிறது என்று கூசாமல் அவர்கள் **பொய் பேசி** சமாளித்து அந்த **சம்பாஷனை** நிகழ்ச்சியை அதோடு நிறுத்திவிட்டார்கள். அந்த நிகழ்ச்சி முடிந்த மறு நிமிடமே **கன்னியா ஸ்திரிகளும்** சபை மக்களும் **பரிசுத்த மரியாளே** எங்களை **இரட்சிக்க வேண்டுமே.** அர்ச்சிக்கப்பட்ட மேரியே எங்கள் விண்ணப்பம் **கேட்கனுமே !** என்று ஜெபிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இரட்சிப்பை மரியாள் கொடுக்க முடியாதே ! மரியாள் தெய்வமல்லவே?

**காணாவூர்** கலியானத்தில் திராட்சை ரசம் குறைவுபட்டபோது அதை **மேரியிடம்தான்** அறிவித்தார்கள். ஆனால் மேரியே இயேசுவை காண்பித்து அவர் என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்யுங்கள் என்றார். **மரியாள் ஒரு அற்புதமும்** உயிரோடு இருக்கும்போதும் செய்யவில்லை. **மரித்தபிறகும்** செய்யவில்லை என்றும் நாம் அறிவோம். வேதாகம கல்லூரியில் டாக்டர் பட்டம் பெற்ற ஆயர் ஒருவர் என்னிடம் பேசும்போது நாங்கள் **மரியாளிடம்** ஜெபிக்கவில்லை. ஆனால் பரிசுத்த தாயே! மரியே! எங்களுக்காக **பரிந்து பேசும்** என்றும் இயேசுவிடம் **வேண்டிக்கொள்ளும்** என்றுதான் கேட்கிறோம்.

அதற்கு நான் : **ஃபாதர்** 1 தீமோ 2:5,6ல் தேவனுக்கும் மனுஷனுக்கும் **மஸ்தியஸ்தர்** (Mediater) ஒருவரே அவர் **இயேசு கிறிஸ்து** என்று தெளிவாக வேதத்தில்

எழுதியிருக்கும்போது **மத்தியஸ்தராக** இயேசுவே **பிதாவிடம்** நமக்காக **பரிந்து பேசும்போது** எதற்கு செத்துபபோன **மரியாளையும்,** அந்தோணியாரையும் **தொல்லைப் படுத்துறீர்கள்!** என்றேன். அதற்கு அவரால் பதில் அளிக்க முடியவில்லை.

என் **ஜாமக்காரன்** பத்திரிகை எல்லாவித **உபதேசங்களையும்** கொண்ட **அனைத்துவிதமான சபைமக்களும்** வாசிக்கின்றனர். கத்தோலிக்க சபையினர் தூத்துக்குடி, கன்னியாகுமரி, **கொல்லம்,** திருவனந்தபுரம் ஆகிய இடங்களிலில் உள்ளவர்களில் நிறையபேர் ஜாமக்காரனை **தமிழிலும், மலையாளத்திலும்** வாங்கி வாசிக்கிறார்கள். ஆகவே அவர்களுக்காகவே இம்முறை இந்த முக்கியமான சத்தியத்தை சற்று விளக்கமாக எழுதினேன்.

ஆகவே அருமையானவர்களே ! **மரியாள் தெய்வமல்ல,** அவர் **செத்துப்போனவர். அ**ந்தேணியார் **தெய்வமல்ல,** ஆகவே **மரியாளோடு பிரார்த்திக்காதீர்கள். ஜெப மாலையை** நம்பாதீர்கள். அது **உங்களை காப்பாற்றாது,** உங்களை **சுகமாக்காது. இயேசுவின் வசனமே** உங்களை சுகமாக்கும். சங். 107:20

இயேசு கூறினார். நானே **வழி,** நானே **சத்தியம்,** நானே **ஜீவன்,** நானே **வாசல்** இந்த வாசல் வழியாக அல்லாமல் வேறு எந்த வழியாகவும் யாரும் பரலோகம் செல்ல முடியாது.

அதே **மாதா TVயில் செத்தவர்கள்** பெயரில் 500 அனுப்பும் அறிவிப்பை கூறினார்கள். அந்த **செத்துப்போனவர்களுக்காக** Fபாதர் **ஜெபம் செய்தால்** செத்து போனவர் **பரலோகம் போய் விடுவார்** என்று பகிரங்கமாக விளம்பரப்படுத்துகிறார்கள். **மாதா TV நடத்துகிறவர்கள் நூற்று நூறு பொய் பேசுகிறார்கள். மாதா TVயில்** கூறுவதை **நம்பாதீர்கள்.** அதனால்தான் யாரையும் பாட்டுக்காககூட **மாதா TV யை பார்க்க சொல்ல வேண்டாம்** என்று கேட்டுக்கொண்டேன். இப்போது **மற்ற சபை மக்களை** கவர மாதா TVயில் வேதாகம கதைகளை **சினிமாவாக** காட்டுகிறார்கள். அதன் நடுவே **ஜெப மாலை** விளம்பரம், மரியாள் சுகமாக்கினதாக மரியாள் ஜெப **சாட்சிகளை** அறிவித்து மக்களை ஏமாற்றுகிறார்கள். ஆகவே வாசகர்களை எச்சரிக்கவே இதை எழுதினேன். கர்த்தர் இந்த 2021 புது வருடத்தில் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

**- Dr. புஷ்பராஜ்**

## வெளிநாட்டில் வசிக்கும் வசகர்களுக்கு

**கம்ப்யூட்டர்** வைத்துள்ளவர்கள் உங்கள் email ID அனுப்பினால் pdf மூலமாக நீங்கள் எடுத்து வாசிக்கும் வகையில் நான் அனுப்புவது உங்ளுக்கு நல்லது.

இந்தியாவில் உள்ளவர்களும் கம்ப்யூட்டர் whatsapp வைத்திருப்பவர்கள் இந்த ஆலோசனையை பின்பற்றலாம்.

# கேள்வி? பதில்!

**கேள்வி :–** எங்கள் சபை கன்வென்ஷனுக்கு உங்களுக்கு அழைப்பு கொடுத்தும் ஏன் வர மறுக்கிறீர்கள் ?

**பதில் : –** உங்களுக்கும் உங்கள் ஆயர் அவர்களுக்கும் என்னை அழைத்ததற்கு நன்றி கூறுகிறேன். ஏன் நான் வர மறுத்தேன் என்பதை ஆயருக்கு எழுதிய கடிதத்திலேயே குறிப்பிட்டுள்ளேனே ! இப்போதைய **கொரோனா** சூழ்நிலை இன்னும் மாறவில்லையே 50 நபர் அல்லது 100 நபருக்குமேல் ஆலயத்திலோ, வளாகத்திலோ கூடக்கூடாது என்ற அரசாங்க அறிவிப்பும், கட்டளையும் இன்னும் மாறவில்லையே. **கொரோனா** தொற்று இன்னும் இரண்டு வருடம் நீடிக்கும் என்று கூறப்படுகிறது. இப்போது நிலைமை ஓரளவு கட்டுக்குள் வந்துள்ளது என்றாலும் கொரோனா தொற்று பரவிக்கொண்டிருக்கும் நிலையில்தான் இருக்கிறது.

**பஸ்கள்,** ரயில்கள், **விமான சர்வீஸ்கள்** இன்னும் **சகஜ நிலையில்** இயக்கப் படவில்லை. ஆகவே கொஞ்ஜம் பொறுங்கள். கடந்த 11 மாதங்களாக நான் வீட்டைவிட்டு வெளியில் எங்கும் ஊழியத்துக்காக செல்லவில்லை. கர்த்தருடைய சத்தியத்தை சபை மக்களுக்கு விளக்கி சொல்ல **எனக்கும் பாரமும்** & ஆசையும் இருக்கிறது. **கொரோனா** தொற்றிலிருந்து 14 நாட்கள் ஆஸ்பத்திரியிலிருந்து **உயிரோடு** நான் வெளியே வந்ததே பெரும் கிருபையாகும். கர்த்தருக்கு ஒரு நோக்கமில்லாமல் என் ஆயுளை நீடிக்கமாட்டார். ஊழியத்துக்கென்று என்னை முன் குறித்தவர். இப்போதைய சூழ்நிலையில் இந்த 81வயதை கடக்கும் நிலையிலும் **பழைய பெலத்தோடு** என்னை வாழ வைத்தாரே அந்த நோக்கம் நிச்சயம் நிறைவேறும்.

வீட்டைவிட்டு வெளியில்தான் போகவில்லையேதவிர, மற்ற எல்லாவித ஊழியங்களும் தொடர்ந்து செய்ய ஆரம்பித்துவிட்டேனே !

**பத்திரிகை** ஊழியம், **கடித** ஊழியம், **email** வழியாக, **தொலைபேசி** வழியாக கனவென்ஷனில் பிரசங்கிப்பதைபோல வசனங்களோடு ஆலோசனை கொடுப்பது எனக்கு மிகவும் திருப்தியாக இருக்கிறது. Zoom வழியாக செய்தி கொடுக்க எனக்கு பழக்கமில்லை. இஷ்டமும் இல்லை. எல்லாவற்றிக்கும் ஒரு முடிவு உண்டல்லவா ! இப்போதுள்ள என் ஊழிய நிலையே தொடருவது தேவ சித்தமானால் எஞ்ஜிய நாட்களையும் அதற்கேற்றாற்போல் என்னை மாற்றிக்கொண்டு ஊழியம் செய்யவேண்டியதுதான். ஜெபியுங்கள், நானும் ஜெபிக்கிறேன். உங்களையெல்லாம் நேரில் காண ஆவலாக இருக்கிறேன். கர்த்தர் அந்த நாளை வாய்க்க செய்வார் என நம்புகிறேன்.

**கேள்வி:–** **சத்தியம்** உங்களை விடுதலையாக்கும் என்று இயேசு கூறியபடி வசனத்தை சொல்லித்தான் நான் ஜெபிக்கிறேன். ஒரு மாற்றமும் உண்டாகவில்லையே?


**பதில் :–** யோ. 8:32 வசனத்தை மறுபடியும் வாசியுங்கள் **சத்தியத்தை அறிவீர்கள்** அதன்பின்தான் சத்தியம் உங்களை விடுதலையாக்கும். **சத்திய வசனத்தை** குறித்து நீங்கள் சரியாக அறியாமல் **வசனத்தை** சரியாக விளங்கிக்கொள்ளாமல், உங்கள் சொந்த வாழ்க்கையில் **வசனத்தின்படி** சத்தியத்தை கைக்கொள்ளாமல், **வசனத்தின்படி** ஜீவிக்காமல் – சத்தியம் எப்படி உங்களை விடுதலையாக்கும். சத்தியத்தை ஆராய்ந்து பாருங்கள் என்று இயேசு கூறினார். You should know about the Truth then the Truth will set you free.

**கேள்வி :–** என் கணவர் மார்தோமா சபை அங்கத்தினர், என் குடும்பம் C.S.I. சபையை சேர்ந்தது. கடந்த வருடம் எங்கள் தலைமை பிஷப் (மாடரேட்டர்) **மொத்ரோபோலித்தா** அவர்கள் **மரித்துவிட்டார்.** அவரை அடக்கம் செய்ததை நாங்கள் மொபைலில் கண்டோம். மார்தோமா சபையின் சடங்குபடி அவரை **நாற்காலியில் உட்கார வைத்து குழியில் இறக்கினார்கள்.** இதன் காரணம் என்ன ? என்று என் கணவரிடம் கேட்டபோது அவருக்கு காரணம் சொல்ல தெரியவில்லை. **ஆயரை** கேட்டு சொல்கிறேன் என்றார். ஆயரும் இது **ஆர்த்தடாக்ஸ்** சபையினரின் **சம்பிரதாயம்.** மார்தோமா சபை **அர்த்தடாக்ஸ்** சபையிலிருந்து பிரிந்து வந்தபோது, இந்த **சடங்குகளையும், சம்பிரதாயங்களையும்** அப்படியே **மார்தோமா சபையும்** பின்பற்றியது. அதில் **புகை போடுவது** (தூப கலசம்) பிஷப்மார் **கலியாணம் செய்யாதது**, அதோடு பழைய காலத்து **ஆசாரியர்கள்**

உடுத்துவது போன்ற அங்கி இதெல்லாம் அப்படியே பின்பற்ற தொடங்கினார்கள். அதில் தவறில்லை என்றார் ! உங்கள் விளக்கம் என்ன ?

**பதில் :–** பிஷப் அடக்கத்தை குறித்து நீங்கள் ஆவிக்குரிய அர்த்தம் கேட்டு குழப்புவீர்கள் என்பதால் உங்கள் ஆயர் சரியான விளக்கம் கொடுக்க தயங்கினார். மார்தோமா சபை இன்னும் **பழைய ஏற்பாட்டு** சபையாகவே இருக்கிறது. மேலும் தங்கள் **பாரம்பரியங்களில் இருந்து** விலகி **புதிய ஏற்பாட்டு சபை** உபதேசத்துக்கு அவர்கள் வர மறுக்கிறார்கள்.

பொதுவாக ஆயர்கள் வேதாகம கல்லூரியில் படிக்கும்போதே சபையின் சடங்குகள், சம்பிரதாயங்கள் யாவற்றையும் அறிந்திருப்பார்கள். பிஷப்பை நாற்காலியில் உட்காரவைத்து அடக்கம் செய்வதை குறித்து மார்தோமா சபை ஆயர்களுக்குள்லேயே கேள்வி எழுந்து, அந்த அடக்க ஆராதனை சடங்கை குறித்து ஒருவருக்கொருவர் பேசி சிரித்து இருப்பார்கள். அந்த **சடங்குகளுடன் மற்ற தேவையற்ற சடங்குகளையும் தவறு** என்று அறிந்தும் **இரட்சிக்கப்பட்ட** ஆயர்கள் அதிலிருந்து வெளிவர முடியாமல் தவிக்கிறார்கள். ஆனால் **மார்தோமா சபையில்** இரட்சிக்கப்பட்ட ஏராளமான விசுவாச குடும்பங்களை நான் அறிவேன், அவர்கள் இப்படிப்பட்ட **மூட நம்பிக்கைகளை** கைக்கொள்ளாமல், அவைகளில் **கலந்துகொள்ளாமல்** தங்கள் **ஆத்துமாவை காத்துக்கொண்டு** வசனத்தின்படி **சாட்சியுடன் வாழ்கிறார்கள்.** அவர்கள் **மார்தோமா சபையில்** இருந்துகொண்டே தனிப்பட்ட முறையில் **சுவிசேஷ ஊழியங்கள்** செய்தும் **வீட்டு ஜெப கூட்டங்களை** நடத்தியும் வாழ்கிறார்கள். அப்படிப்பட்ட குடும்பங்கள் ஒன்றிலிருந்துதான் ஜாமக்காரனுக்காக இந்த கேள்வியும் கேட்கப்பட்டது.



மார்தோமா பிஷப் மெத்ரோ போலித்தா அவர்களை மரித்த நிலையில் நாற்காலியில் உட்கார வைத்துள்ளார்கள்

**மார்தோமா பிஷப்** மரித்துப்போனால் சவத்தை படுக்க வைக்காமல், **சவ பெட்டியில்** வைக்காமல்

**நாற்காலியில்** அமரவைத்து குழியில் **உப்பிட்டு** அப்படியே **நாற்காலியை** குழியில் இறக்குவார்கள்.

- இப்படிப்பட்ட சடங்குகள் **பாபிலோனிய** அரசுகளிலும் ராஜா இறந்து போனால் மட்டுமே அவர்களை **உட்கார வைத்து** குழியில் வைப்பார்கள். **எகிப்து** தேசத்திலும் இந்த வழக்கம் இருந்தது. அதோடு **இறந்தவர்க்கு** என்ன பிடிக்குமோ அந்த பொருள்களையும் **சவத்துடன் வைத்து** அடக்கம் செய்வார்கள். நம் இந்தியாவில் உள்ள **திராவிட பழங்குடியினர்** மத்தியிலும் இப்படிப்பட்ட சடங்குகள் இருந்திருக்கிறது.

இப்போதும் நம் இந்தியாவில் **அசாம்,** அருணாசல பிரதேசம் ஆகிய இடங்களில் உள்ள **பழங்குடியினர்** தங்கள் **கோத்திர தலைவர்கள்** இறந்தால் உட்காரவைத்து அடக்கம் செய்வார்கள்.

## மூட பக்தி

இந்தியாவில் **நீலகிரி காடுகளில்** வாழும் **படுகர், முதுவர்** இன் **ஆதிவாசிகள்** வருடத்துக்கு ஒரு முறை கிராம தலைவனிடம் ஆசீர்வாதம் வாங்க வருவார்கள். அந்த தலைவன் தன் **காலை தலைமீது** வைத்து மக்களை ஆசீர்வதிப்பான். வருடத்துக்கு ஒரு முறை நடக்கும் இந்த சம்பிரதாயம் இப்போதும் வழக்கத்தில் உண்டு.

**மார்தோமா சபை பிஷப்களும்** ஆதிவாசிகளைபோல **பழங்காலத்து** பாபிலோனிய தலைவர்களை போல **பாரம்பரிய கலாச்சார சடங்குகளை** விடாமல் **மூடபக்திகொண்டு கிறிஸ்தவ பெயரையும் விடாமல்** இப்படிப்பட்ட சடங்குகளை தொடர்ந்து செய்வார்களேயானால் இந்ததவறான பாரம்பரிய செயல் **கிறிஸ்துவின் மனதை** எத்தனையாய் வேதனைப்படுத்தும் என்று அறியாமல் இருப்பதுதான் மனவேதனையை உண்டாக்குகிறது. இதுதான் **மூட பக்தி என்பதாகும்.**

இந்தியாவில் **இந்து மதத்தினரின்** சடங்குகளையும் அவர்கள் வணங்குகிற **விக்கிரக தெய்வங்களின்** உருவங்களை பார்த்து வணங்கும் மிகப்பெரிய படிப்பு படித்த இந்து மதத்தினரான விஞ்ஞானிகள், நீதிபதிகள் இப்படிப்பட்டவர்களுக்கும் அவர்களுடைய தெய்வங்களின் உருவத்தை பார்த்து, **நம்மை படைத்த கடவுள்** இப்படி **அசிங்கமாக** இருக்கிறாரே! என்ற எண்ணம் அவர்களுக்கு வருவதில்லை, அவர்கள் தெய்வங்களின் வருவதை கவனியுங்கள். **யானை** தலை – **எலி** வாகனம், உயிர் பரிக்கும் **எமன் – எருமை வாகனம், ஆறு** முகங்கள், **12 கைகள், காளி** வேறு, **பத்திரகாளி** வேறு, முப்பத்து **முக்கோடி தெய்வங்கள்** அதில் **பன்றி** உருவம், **மீன்** உருவம், **பாம்பு** உருவம், இந்து மதத்தில் **படைப்பவர்** ஒருவர், **காப்பவர்** ஒருவர், **அழிப்பவர்** ஒருவர், இந்த **மூவர்களுக்கும்** ஒற்றுமையில்லை. இந்த தெய்வங்களின் **மனைவிமார்களுக்குள்** பொறாமை, சண்டை நிறைந்துள்ளது. இந்த நிலையில் மக்கள் தங்கள் **பிரச்சனைக்காக** இந்த **தெய்வங்களை** அனுகினால் இது என்னால் செய்ய முடியாது, நீ அவரிடம் கேள் என்பதை நினைக்கும்போது

தெய்வத்தின்மேல் எப்படி நம்பிக்கை வரும். என்ன பக்தி இது. இவர்கள் குழந்தைகளை இந்து கோவிலுக்கு அழைத்து சென்றாலும் அந்த **பிள்ளைகளும்** உள்ளே வர பயப்பட்டு அழுகிறது. காரணம், **கண்கள் இரண்டும்** பிதுங்கி, **நாக்கு வெளியேவர** ஒரு கையில் **தலையை வெட்டி பிடித்திருக்கும்** காட்சியுள்ள சிலை. இது எவரையும் பயமுறுத்தும். அப்படியிருக்க **சிறு பிள்ளைகள்** பயப்படுவதில் ஆச்சரியமில்லையே. இதை **தெய்வகுத்தம்** என்று சொல்லி உள்ளே வர மறுத்த அந்த சிறு பிள்ளைக்காக **பரிகாரம் செய்ததை** ஒரு டாக்டர் கூறக் கேட்டேன்.

படிப்பும், விஞ்ஞானமும் முன்னேரிய இக்காலத்திலும் மெத்தபடித்த மக்கள் அவைகளை **தெய்வம்** என்று நம்பும்போது, **உயிருள்ள** தெய்வம், **பேசும்** தெய்வம், **பார்க்கும்** தெய்வம், **உள்ளத்தையும், சிந்தனைகளையும்** அறியும் நம் **இயேசு தெய்வத்தை** ஆராதிக்கும் **மார்தோமா** போன்ற பெரிய கிறிஸ்தவ சபைகளின் **தலைவர்கள்,** ஆயர்கள், சபையில் **வேதாமத்தை** அறிந்தவர்கள் ஒருவருக்காவது இப்படிப்பட்டப அடக்க ஆராதனை, **மூட நம்பிக்கை,** கர்த்தர் அதை வெறுக்கிறார். வேதத்தில் இல்லாத ஒரு **புற ஜாதியினரின் சடங்கு** என்று இவர்கள் யாருக்கும் இதைப்பற்றி **யோசிக்க** அல்லது சிந்திக்க முயற்சிகூட எடுக்க இவர்களுக்கு விருப்பமில்லையா?

இந்த சபையினரின் **பின் சந்ததிக்கும்,** அறிவு வளர்ந்து கம்ப்யூட்டர் யுகத்தில் வாழும் நம் பிள்ளைகளுக்கும் இவைகளை குறித்து **என்ன சொல்லி விளக்குவார்கள்?** நான் அந்த சபை மக்களை **அவமானப்படுத்த** இதை எழுதவில்லை. **மார்ட்டீன் லூத்தர்** வழி வந்த கிறிஸ்தவர்கள் நாங்கள் என்று இவர்களால் கூற முடியுமா ? வசனத்தின்படி வாழும் உண்மை கிறிஸ்தவர்கள் நாங்கள் என்று இவர்களால் கூற முடியுமா ?

அதே சமயம் இதே **மார்தோமா,** ஆர்த்தடாக்ஸ், கத்தோலிக்கர் **சபைகளில்** மனம் திரும்பி **இரட்சிக்கப்பட்டு விசுவாசிகளாய்** வாழும் உண்மை கிறிஸ்தவர்கள் உண்டு. அவர்கள் அற்புதமாக ஆத்தும ஆதாயம் செய்து சாட்சியுடன் வாழ்ந்து, ஊழியம் செய்வதை நான் அறிவேன். அதே சபைகளில் உள்ள பல விசுவாசிகள் சுவிசேஷம் அறிவித்து புதிய ஆத்துமாக்களை கூட்டி சேர்த்து ஜெப கூட்டம் நடத்தும் நல்ல விசுவாசிகளையும் அறிவேன். இவர்கள் ஆத்தும ஆதாயம் செய்த மக்களை **ஆராதனைக்கு எங்கு அனுப்புவார்கள் ?** நிச்சயமாக தங்கள் சபைக்கு அழைத்து செல்ல மாட்டார்கள், என்ன பரிதாபமான நிலை பார்த்தீர்களா !

**மார்த்தோமா** சபை மக்கள் சிந்திப்பீர்களா ? கர்த்தர் நியாயத் திர்ப்பின் நாளில் உங்களிடம் கணக்கு கேட்பாரே ! என்ன பதில் சொல்லுவீர்கள் ?

☐ **தமிழனாகிய** Dr. புஷ்பராஜ் ஆகிய என்னை 1966ம் வருடம் **கேரள மக்களிடையே** அறிமுகப்படுத்தியது **மார்தோமா சபையினராகும்.** (அன்றைய காலத்தில் மொழி பெயர்போடுதான் என் பிரசங்கம் இருக்கும்) அதன்பின்தான் **மலையாள C.S.I.** சபைகள்

என்னை தங்கள் **கன்வென்ஷன்களில்** உபயோகித்தார்கள். அதனால்தான் மார்தோமா சபை மக்களைக்குறித்து நான் **நன்றியுள்ளவனாக** இவைகளை எழுதுகிறேன். மார்தோமா சபைகளை குறித்து **அக்கரை எனக்கு உண்டு.** இன்றுவரை **மார்தோமா சபை** மக்கள் எனக்காக **ஜெபிக்கவும்** என் **ஊழியத்தை தாங்கிக்கொண்டும்** இருக்கிறார்கள்.

ஆகையால் இப்படிப்பட்ட நல்லசபை **மூட பக்தியிலிருந்தும்,** அர்த்தமில்லாத **சடங்காசாரங்களிலிருந்தும்** விடுபட்டு தங்கள் பழைய உபதேசங்களை மாற்றி **திருமணமான பிஷப்மார்கள்** சபை தலைவர்களாக வரவேண்டும் என்று அடிக்கடி ஜாமக்காரனில் எழுதி வருகிறேன்.

அப்படியே **பிஷப்மாரின்** அடக்கம் செய்வதிலும், **நாற்காலியில்** அமரவைத்து அடக்கம் செய்யும் **அர்த்தமில்லாத சடங்கை** நீக்க நீங்கள் தீர்மாணம் செய்ய வேண்டும்.

- ☐ வேத வசனத்தின்படி **பெரிய** பிஷப்போ, **சிறிய** பிஷப்போ **நாற்காலியில்** அமரவைத்து **அடக்கம் செய்தாலும் படுக்கவைத்து அடக்கம்** செய்தாலும் **குழியில் உப்பு** போட்டு அல்லது உப்பு போடாமல் அடக்கம் செய்தாலும் இவர்கள் **மனம் திரும்பாமல்** இயேசுவின் இரத்ததால் கழுவப்படாமல் **இரட்சிக்கப்படாமல்** மரித்துப்போனால் இவர்கள் **எப்படி அடக்கம்** செய்தாலும் **இவர்கள் யாரும் பரலோகம் போக முடியாது** என்பதை எல்லாரும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

**ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் அவன் தேவனுடைய இராஜ்ஜியத்தை காண மாட்டான்.** யோ. 3:3 என்று இயேசு கூறினார்.

1 பேது 1:18,19 உங்கள் முன்னோர்களின் **பாரம்பரியமாய்** நீங்கள் **அனுசரித்து** வந்த வீனான நடத்தையினின்று... மீட்கப்படாமல்... ஆட்டுக்குட்டியாகிய **இயேசுவின்** விலையேறப்பெற்ற **இரத்ததினாலே** (மீட்கப்படவேண்டும்) என்று பேதுரு கூறுகிறார்.

**மார்ட்டீன் லூத்தர்** காலத்தில் உண்டான ஆவிக்குரிய புரட்சி **மார்தோமா சபையில்** மறுபடியும் உண்டானால்தான் வீன் **சடங்காசாரங்களை** கைக்கொள்ளும்**, மூட பக்தியுள்ள** இப்படிப்பட்ட சபைகளில் ஆவிக்குரிய மாற்றம் உண்டாகும், சபை மக்களும் கிறிஸ்துன் வருகைக்கு தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள செய்ய முடியும்.

அப்படி ஒரு புரட்சி மார்தோமா சபைகயில் உண்டாகாமல் எத்தனை வருடங்கள் **மாராமன்** போன்ற **கன்வென்ஷன்கள்** நடந்தாலும் எத்தனை **பெரிய பிரசங்கிமார்களை** அழைத்து பிரசங்கம் செய்ய ஏற்பாடு செய்தாலும் இயேசுவின் **இரண்டாம் வருகையில்** கைவிடப்பட்டு போவார்கள். **மார்தோமா சபை மக்கள்** தங்கள் ஜெபக்குழுக்களில் கூடி ஜெபித்து இப்படிப்பட்ட மாற்றம் சபைகளின் **தலைமையில்** உண்டாக வேண்டும் என்று ஜெபிக்க தொடங்குங்கள். நான் எப்போதோ **மார்தோமா சபை பிஷப்மார்களுக்காக** ஜெபிக்க தொடங்கிவிட்டேன். இபபோதும் ஜெபித்துக்கொண்டிருக்கிறேன்.

**இயேசு அழைக்கிறார் நிர்வாகி Dr. பால் தினகரன் வீட்டில்**
**வருமான வரி துறை & அமலாக்க துறை சோதனை**
**5 கிலோ தங்கம் கணக்கில் வராத 126 கோடி ரூபாய் பிடிபட்டது**

**கேள்வி : இயேசு அழைக்கிறார்** நிர்வாகி **Dr. பால் தினகரன்** ஊழியங்கள் பெரும் வீழ்ச்சியடைந்து அரசியல்வாதிகள் வீட்டில் நடக்கும் திடீர் சோதனைகள்போல் இவர்கள் வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டு **125 கோடிகள்** கைப்பற்றப்பட்டதாகவும் **5 கிலோ தங்கம்** கண்டுபிடிக்கப்பட்டதாகவும் செய்திகள் தீயாய் **TV**யிலும் தினப்பத்திரிகைகளிலும் தினம் ஒரு செய்தியாய் வந்துக்கொண்டே இருக்கிறதே ! **காணிக்கையை** அள்ளி கொடுத்த



எங்களைப் போன்ற **வியாபாரிகள்,** எங்கள் **பெற்றோர்** அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளவில்லை. பலரை கிறிஸ்துவுக்கு நேராய் வழி நடத்திய ஊழியக்கார குடும்பத்துக்கு **இப்படி சம்பவிக்கலாமா? பால் தினகரனுடைய** அப்பா சகோ. D.G.S. **தினகரன்** உயிரோடு இருந்திருந்தால் **இப்படி நடக்குமா ? இப்படி ஏராளமானவர்கள் கேள்வி கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.**



**பதில் :– இயேசு அழைக்கிறார்** ஸ்தாபனத்துக்கு ஏற்பட்ட இந்த ஊழல் அவமானத்தின் **ஆரம்ப காரண கர்த்தாவே சகோ. D.G.S. தினகரன்** அவர்கள்தானே! இவர் ஊழியம் ஆரம்பிக்கப்பட்ட **மேட்டூர்** (சேலம்) என்ற சிற்றூரில் சகோ. தினகரனின் விசுவாசிகளான குடும்பங்களுக்கு **சகோ. தினகரனிடம்** நெருக்கம் அதிகம். ஆனால் தனிப்பட்ட முறையில் அவரை மிக ஆழமாக அறிந்தவன் நான் மட்டுமே. ஒன்றாக ஜெபித்து நாங்கள் இருவரும் ஒரே அறையில் படுத்து உறங்கி, சில ஊர்களில் ஊழியங்களை செய்து, அரசாங்க பஸ்களில் பயனம் செய்து ஊர் திரும்பியுள்ளோம்.

அவருடைய உண்மையான **ஜெப வாழ்க்கையும்** வேத வசன **தியானத்தையும்,** உண்மையான ஊழியத்தையும் **அறிந்தவனும் நான்தான்.** அவர் **கர்த்தரின் திட்டத்திலிருந்து** விலகி **பிசாசின் வலையில்** கொஞ்ஜ கொஞ்ஜமாக **வீழ்ந்து போனதையும்** மிக நன்றாக அறிந்தவனும் நான்தான். அதேபோல் அவர் **வீழ்ச்சியின்** ஆரம்பத்தை **வெளிப்படையாக** தைரியமாக சுட்டிக்காட்டி எச்சரித்தது இரண்டு நபர்கள்.



Dr. **புஷ்பராஜ்,** பாஸ்டர் **பால்** (பெங்களூர்) தம்பி **பால் தினகரன்**, சகோ. D.G.S. **தினகரன்,** திருமதி **ஸ்டெல்லா தினகரன்** கையில் குட்டி மகள் **ஏஞ்சல் தினகரன்**

இரண்டு பேர்களில் **நானும்** ஒருவன். மற்ற நபர் **கோயமுத்தூர்** லட்சுமி மில்ஸில் வேலை செய்து கொண்டிருந்த **சகோ. எட்வர்ட் பால்** அவர்கள் ஆகும்.

சகோ. D.G.S. தினகரன் இயேசுவோடு **பேசுகிறவர்.** நல்ல **தேவ மனிதர்** என்ற **மரியாதையின்** நிமித்தமும் அவர்மேல் மக்கள் கொண்டிருந்த ஆவிக்குரிய **பயத்தின்** நிமித்தமும் அவரின் **வழி விலகலை** நாங்கள் இருவரும் ஆரம்பத்திலேயே அவைகளை அறிந்தும் **அவரின் தவறான** ஊழிய வழியை சுட்டிக்காட்ட ஆரம்பத்தில் தயங்கினோம் என்றாலும் **ஒரு கட்டத்தில்** ஆவியானவர் எங்களை நெருக்க ஆரம்பித்தபடியால் **நாங்கள் இருவரும்** மிகுந்த ஜெபத்தோடும், மிகுந்த மன வேதனையோடும் அவருக்கு முன்பாக **நேருக்கு நேர்** அமர்ந்து அவரிடம் பேசி அவர் **தவறுகளை** சுட்டிக்காட்டினோம். ஆனால் அதற்கு சகோ. D.G.S. தினகரன் ஒரு வார்த்தையும் கூறவில்லை, **விளக்கமோ, மறுப்போ** கூறாது **கண்களை மூடியபடி** அமர்ந்து இருந்தார். அன்று இரவு நாங்கள் இருவரும் அவரவர் வீடுகளில் சென்று இரவு தூங்கமுடியாமல் தவித்தோம். அன்று **மொபைல்** போன்ற நவீன சாதனங்கள் இல்லாத காலம். நாங்கள் இருவரும் கடிதங்கள் மூலம் மன வேதனைகளை பகிர்ந்துகொண்டோம். இத்தனைக்கும் நான் குறிப்பிட்ட **சகோ, எட்வர்ட்பால்** அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் என்னை பிடிக்காது. அது தாழ்வு மனப்பான்மையாக இருக்கலாம். ஆனால் ஆவிக்குரிய விஷயத்திலும், **ஊழியத்திலும்** எங்கள் இருவருக்கும் ஒரே மாதிரி **பாரமும் ஊழிய வைராக்கிய எண்ணமும்** இருந்தது. ஆகவேதான் நாங்கள் இருவரும் சில இடங்களில் ஒன்றாக ஊழியம் செய்தோம்.

## Bro. D.G.S. தினகரன் துணிந்து கூறிய முதல் பொய்

இந்த **பொய்களை** இவர் கூறுவதற்கு முன்வரை இவர் மிக அற்புதமான **உண்மையான ஊழியம்** செய்தவர் ஆகும். அவரால் தொடப்பட்டவர்கள் ஏராளம் அகும். ஆறுதல் அடைந்தவர்கள் ஏராளம். அவர் மகன் **பால் தினகரன்** வளர்ந்து

வாலிபனாகும்போதுதான் **அவர் எண்ணங்கள் மாறியது.** அவர் **ஊழிய திட்டங்கள் மாறியது.** அந்த சமயம்தான் அவர் வாழ்க்கையில் முதல் **அமெரிக்க பயணம்** மேற்கொண்டார். அப்போதே அவருடன் **சோதனைக்காரனும்** பயனமானான்.

அமெரிக்காவில் **ஓரல் ராபர்ட்** என்ற ஊழியரின் **கல்வி ஸ்தாபனங்களையும்** குறிப்பாக **யூனிவர்சிட்டி** முழுவதையும் சகோ. தினகரன் பார்வையிட்டார். அப்போதுதான் **பிசாசு** சகோதரன் உள்ளத்தில் புகுந்தான். அதன்பின் அமெரிக்காவைவிட்டு **கனடா** நாட்டுக்கு பயனமானார், அந்த பயனத்தில்தான் இந்தியாவில் தான் **ஆரம்பிக்கபோகும் வியாபார ஏற்பாடுகள்** மனதில் உருவானது.

இந்த குறிப்பிட்ட சில **விவரங்களையும்** D.G.S.ன் **மற்ற விவரங்களையும்** 1975ம் வருட **ஜாமக்காரனில்** வாசகர்களுக்கு எழுதி அறிவித்தேன். 1976ம் வருடம் எங்கள் இருவரின் நெருக்கம் முறிந்தது. அவரை நேசிக்கிற அவரின் விசிறிகளும் என்னை வெறுக்க ஆரம்பித்தனர். இபபோதைய புதிய தலைமுறையினருக்கு D.G.S.ன் ஆரம்ப விவரம் தெரியாது என்பதால் சுருக்கமாக குறிப்பட்டசில சம்பவங்களை மட்டும் எழுதி அறிவிக்கிறேன்.

☐ இனி நடந்த விவரங்களை சுருக்கமாக அறிவிக்கிறேன். அமெரிக்காவிலிருந்து சகோ. தினகரன் **கனடா நாட்டுக்கு** வந்து சேர்ந்தார். **கனடாவில்** அவர் வழக்கமாக தங்கும் ஒரு குடும்பத்தினர் வீடு இருந்தது. அவர்கள் நாகர்கோவில் **ஜேம்ஸ்டவுன்** என்ற ஊரில் உள்ளவர்கள். நானும் **கனடா** நாட்டுக்கு போகும்போது கனடா நாட்டில் எங்கு என் கூட்டம் நடந்தாலும் அவர்கள் வீட்டில்தான் நான் தங்க **கூட்டம் நடத்துபவர்கள்** ஏற்பாடு செய்வார்கள். அந்த குடும்பத்தினர் நல்ல வேத ஞானம் உள்ளவர்கள். என்னை சகோ. தினகரனைவிட அதிகம் நேசிப்பவர்கள்.

## காருண்யா கல்லூரி குறித்து முதல் அறிவிப்பு

அந்த **கனடா** வீட்டில் சகோ. தினகரன் தங்கியிருக்கும்போது இரவு அந்த வீட்டின் (Basement) **அடிதளத்தில்** உள்ள அறையில் அவர்கள் குடும்பமாக அமர்ந்திருக்கும்போது சகோ. தினகரன் தன் உள்ளத்தில் உருவான **காருண்யா கல்லூரி திட்டத்தை** அந்த குடும்பத்தினரோடு பகிர்ந்துகொண்டார்.

அமெரிக்காவில் ஓரல் ராபர்ட் யுனிவர்சிடியை கண்டவுடன் இந்தியாவிலும் குறிப்பாக **தமிழ்நாட்டில்** அப்படிப்பட்ட யுனிவர்சிட்டி தொடங்கினால் ஏழை எளியவர்களுக்கு பிரயோஜனமாக இருக்குமே என்றார்.

அதற்கு அந்த குடும்பத்தினர் நல்ல யோசனை ஏழைகளுக்கு **இலவச உயர் கல்வி** கிடைக்குமானால் எத்தனை ஏழை குடும்பங்களுக்கு பிரயோஜனமாக இருக்கும். நாங்களும்

எங்களால் இயன்ற உதவிகளை செய்வோம் என்றனர்.

இதுதான் காருண்யா கல்லூரி தொடங்கியதின் உண்மை சம்பவமாகும்.

மறு வருடமே **கனடா** நாட்டு **மலையாள பாஷை** பேசும் **மார்தோமா & CSI** சபைகள் இணைந்து நடத்திய கூட்டத்தில் பேச நான் கனடா நாட்டுக்கு அழைக்கப்பட்டேன். என்னை அழைத்த **ஆயர்களிடம்** இந்த குடும்பத்தினர் பேசி ஒரு மதிய உணவுக்கு அவர்கள் வீட்டுக்கு என்னை அழைத்து சென்றனர். அப்போதுதான் **காருண்யா கல்லூரி** ஆரம்பிக்கபோகும் திட்டத்தை சகோ. தினகரன் தங்களிடம் பகிர்ந்து கொண்டதை அறிவித்தனர்.

ஆனால் இந்தியாவில் **சகோ. தினகரன்** மக்களை **நம்ப வைக்க** அவர் கூறிய **பொய் கதையை** தன் இயேசு அழைக்கிறார் **பத்திரிகையிலும்** தன் பிரசங்கத்திலும் விவரித்தார். அவர் அறிவித்ததை வாசகர்களுக்கு.... அப்படியே எழுதுகிறேன். இயேசு அழைக்கிறார் பழைய பத்திரிக்கை பிரதிகள் உங்களிடம் இருந்தால் அதைப் பார்த்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## சகோ. D.G.S. தினகரன் அறிவித்த துணிகர தரிசன பொய்

ஒரு நாள் நான் (D.G.S. தினகரன்) ஜெபித்துக்கொண்டிருக்கும்போது திடீரென்று இரண்டு தூதர்கள் என் முன்வந்து ஒரு Blue Print கட்டிட வரைபடம் காட்டினார்கள். இது என்ன என்றேன். இதுதான் என் திட்டமாகிய **காருண்யா கல்லூரி** வரை படம். இந்த கல்லூரியை உன் மூலமாக கட்டி நிறைவேற்ற போகிறேன் என்றார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை! **எனக்கும்** கல்லூரிக்கும் **சம்பந்தம்** இல்லையே! நான் **இயேசுவை** அறிவிக்க மட்டுமே அழைக்கப்பட்டிருக்கிறேன். நான் சாதாரண **வங்கி** அதிகாரி, இத்தனை பெரிய தொகையுள்ள Projectஐ திட்டத்தை எப்படி கட்டி முடிப்பேன் எனக்கு **கல்லூரிப்பற்றி ஒன்றும்** தெரியாதே என்றேன்.

அதற்கு தூதர்கள் பயப்படாதே ! இதற்காக தேவைப்படும் பெரும் பணத் தேவையை நம் **இயேசு அழைக்கிறார்** பங்காளர்களைக்கொண்டே செய்து நிறைவேற்றுவேன் என்றார். இதுதான் நான் கண்ட தரிசனம் என்றார்.

இந்த விவரத்தை **இயேசு அழைக்கிறார்** ஆரம்ப கால நண்பர்களாகிய நாங்கள் 5 பேர் Dr. புஷ்பராஜ், Bro/ லைனல் (B.D.O) அவர் சகோதரர் Dr. பென்னி (கல்லூரி பேராசிரியர்) சகோ. எட்வர்ட் பால் (லட்சுமி மில்ஸ்) ஆகிய எங்களை நேரில் அழைத்து விளக்கினார். **உண்மை என்ன என்பதை அறிந்த நான் மட்டும் அமைதியாக இருந்தேன்.** நல்ல ஒரு தேவ மனிதன் இப்படி **துணிகரமாக** பொய் பேசி **தூதர்கள்** மூலமாக **அறிவிக்கப்பட்ட**

**திட்டம்** என்கிறாரே! எவ்வளவு துணிகர பொய்! ஒருவேளை உண்மையாக இருக்குமோ? நாங்கள் பாட்டு பாடி ஜெபித்தோம்.

## முதல் எச்சரிப்பு

ஜெபம் முடிந்தவுடன் **ஆவியானவர்** மிக அருமையாக எங்களில் சிலர் மூலமாய் **முதல் எச்சரிப்பை** அறிவித்தார்.

எங்களில் தைரியமாக பேசக்கூடியவர் சகோ. **எட்வர்ட் பால்** ஆகும். அவர் உட்கார்ந்தவாரே பிரதர் இந்த திட்டம் **இயேசு அழைக்கிறார்** ஊழியத்தின் **திட்டமாக தெரியவில்லை.** நாம் இயேசு **கிறிஸ்துவை** மட்டுமே அறிவிக்க வேண்டும். **சபை உபதேசங்கள்** எதையும் இந்த ஊழியத்தில் கலக்கக்கூடாது என்றுதானே நாம் பேசிக்கொண்டோம். நீங்களும் அதுதான் என் தரிசனம் என்று பலமுறை கூறினீர்கள். அதனால்தானே பல்வேறு இடங்களில் வாழ்ந்த நம்மை ஒரு கிராம ஊழியத்தில் **ஒன்று சேர்த்தார்.** அப்படியிருக்க திடீரென்று **சுவிசேஷ ஊழியத்துக்கு** சம்பந்தமில்லாத **கல்லூரி தொழிலில்** எப்படி கால் வைப்பது என்றார். அவர் இப்படி கூறிய பின்தான் மற்ற இரண்டு சகோதர்களுக்கும் தைரியம் வந்தது.

ஒரே சமயத்தில் நாங்கள் நால்வரும் **கல்லூரி கட்டும் விஷயத்தில் எங்களுக்கு ஒப்புதல் இல்லை** என்று கூறிவிட்டோம். அதன்பிறகு சகோ. D.G.S. தினகரனோடுள்ள ஜெப ஐக்கிய தொடர்புகளை நிறுத்திவிட்டோம்.

நாங்கள் விலகியபின் சகோ.தினகரனுடைய **இருதயம் கடினப்பட்டு** மிகவும் **துணிகரம்** உண்டானது. அதன் காரணம் பிஷப்மார் கொடுத்த தவறான தைரியம் அவரை தொடர்ந்து தவறு செய்ய வைத்தது. அதில் மிகவும் முக்கியமானவர் **மெட்ராஸ்** C.S.I. பிஷப் Rt. Rev. **சுந்தர்கிளார்க்** என்வராகும். பிரதர் **கர்த்தர்** உங்களிடம் **கல்லூரி** கட்டச் சொன்னார் என்றால் மற்றவர்கள் கூறுவதை குறித்து கவலைப்படாதீர்கள். நான் மற்ற எல்லா பிஷப்மார்களையும் உங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன். அவர்களின் சபை மக்களைக்கொண்டு கல்லூரி கட்டி முடிப்பதற்கான **பண உதவிகளை** அந்தந்த டையோசிஸ் மக்களுக்கு அறிவித்து உங்களுக்கு பணம் கிடைக்க உதவி செய்வேன் என்று ஊக்கப்படுத்திவிட்டார்.

## சகோ. தினகரனுக்கு கர்த்தர் உணர்த்திய பயங்கரமான எச்சரிப்பு

கர்த்தர் சகோ. தினகரன் மகள் **கார் விபத்தில் பலியானவுடன்** சகோ. தினகரனுக்கு ஒரு மாற்றம் ஏற்பட்டு பிஷப் சுந்தர் கிளார்க்கிடம் காருண்யா கல்லூரியை C.S.I. டையோசிஸ் பொறுப்பேற்று நடத்திக்கொள்ளுங்கள் ! **என்னை ஊழியம் செய்ய விட்டுவிடுங்கள்,** என்று

விபத்தில் **கை முறிந்த நிலையில்** பிஷப்பிடம் கூறி அழுதார். அப்போதும் **இதே பிஷப்தான்** கல்லூரியை தொடர்ந்து நடத்த ஊக்கப்படுத்தி அவரை கெடுத்துவிட்டார். **மகள் மரித்ததை** கர்த்தரின் **தண்டனை** அல்லது எச்சரிப்பு என்று அவர் ஏற்றுக்கொள்ள மனமில்லாமல் முழு மூச்சோடு லட்ச கணக்கில் மாணவர்களிடம் டொனேஷன் வாங்கி கல்லூரியை நடத்த தொடங்கினார்.

## DGS. தினகரனின் இரண்டாவது பொய்

**காருண்யா கல்லூரியை** தொடங்கும் போது இந்த கல்லூரி **ஏழைகளுக்காகவே** ஆரம்பிக்கப்படும் என்பதை கர்த்தர் சொல்லி ஆரம்பத்தேன் என்று ஒவ்வொரு கூட்டத்திலும், இயேசு அழைக்கிறார் பத்திரிகையிலும் அறிவிப்பு கொடுக்க ஆரம்பித்தார். **ஏழைகளுக்கு** என்பதால் **பணம் வாங்காமல்** கல்லூரிக்கு மாணவ மாணவிகளை சேர்ப்பார் என்று மக்கள் நம்பினார்கள், அதன்பின்தான் உண்மை மக்களுக்கு விளங்கினது. ஒரு லட்சம் ரூபாய் கொடுத்த ஏழைகள் தான் இப்போது கல்லூரியில் பயிலுகிறார்கள்.

### பணம் சேர்க்க சகோ. D.G.S. அவர்கள் அடுத்து அடுத்து கூறிய பொய்கள்

கர்த்தர் **இளம் பங்காளர் திட்டத்தை** தொடங்கச்சொன்னார் என்றார். குடும்பத்தில் எத்தனை பிள்ளைகள், குழந்தைகள் இருக்கிறார்களோ அத்தனை பேருக்கும் தலைக்கு 2000/- ரூபாய் கொடுத்தால் கர்த்தர் அந்த பிள்ளைகளை **நோய் நொடி இல்லாமல் காப்பார்** என்று அறிவித்தார். நம் மக்கள்தான் முட்டாள்கள்ஆயிற்றே, எதையும் யோசிக்க திறமையற்ற வர்கள். **கர்த்தர் சொன்னார்** என்றால் அதை **வசனத்தோடு ஒப்பிட்டு** பார்க்க மாட்டார்கள். எப்படியோ பிள்ளைகளுக்கு **ஆசீர்வாதம்** கிடைத்தால் போதும் என்று அவர் கூறியதை அப்படியே நம்பிவிட்டனர். இதைத்தான் **ஜாமக்காரனில்** நான் எழுதி சகோ. D.G.S. தினகரன் **பொய் சொல்கிறார்.** குழந்தைகளுக்கு ஜெபிக்க 2000/- ரூபாய் வாங்க கர்த்தர் ஒருபோதும் கூறியிருக்கமாட்டார். பணம் கொடுக்க முடியாத **ஏழைகளுக்கு யார் ஜெபிப்பார்?** இவர் ஜெபத்தை **விலைக்கு விற்கிறார்.** இவரை **நம்பாதீர்கள்** என்று எழுதினேன். இப்படி நான் எழுதியதால் ஏராளமானவர்கள் என்னை வெறுத்தார்கள். எனக்கு காணிக்கை அனுப்புவதையும் நிறுத்தினார்கள்.

### விக்கரக பூஜை பொருள் பரிசாக கொடுத்த சாட்சியற்ற செயல்

**காருண்யா** கல்லூரியை டீம்டு (DEEMED) **யுனிவர்சிட்டியாக** மாற்ற **இந்து மத மடாதிபதி** காஞ்சிபுரம் **சங்கராச்சாரியாரை** தன் மகனோடு சென்று சந்தித்து அவர் ஆசீர்வாதம் வாங்கினார். அவருக்கு **பரிசாக வெள்ளியினால்** செய்த **பூஜை பொருட்கள்** அடங்கிய **வெள்ளி பெட்டியை** பரிசாக கொடுத்து திரும்பினார்.

இந்த சம்பவத்தை நான் ஜாமக்காரனில் எழுதியபோது என்னை நேசிக்கும் வாசகர்களில் பலர் நம்ப மறுத்தார்கள். காரணம், சகோ. தினகரனின் **சீஷனான** நாலுமாவடி **மோகன் C. லாசரஸ்** கூறினார் – டாக்டர் எழுதியது **பொய்,** அப்படிப்பட்ட **சம்பவம் நடக்கவேயில்லை,** தேவ மனிதர்மேல் **இவர் சேற்றை வாரி இறைத்துள்ளார்** என்று அறிவிக்க, வாசகர்களுக்கு என்மேல் மேலும் அதிக வெறுப்பு உண்டானது, அதற்காகவே நான் **வட இந்தியாவுக்கு** சென்று **ஹிந்தி சமாச்சார்** என்ற பத்திரிகை அலுவலகத்தில் **தினகரனும், பால் தினகரனும்** வெள்ளி பூஜை பொருள்கள் அடங்கிய பெட்டியை **சங்கராசாரியாரிடம்** அளிப்பதையும் ஆசீர்வாதம் வாங்குவதையும் அந்த பத்திரிக்கைகாரர் மூலமாக அந்த போட்டோவை அவர்களிடம் நான் விலை கொடுத்து வாங்கி ஜாமக்ககாரனில் அந்த போட்டோ எடுத்து அப்படியே வெளியிட்டேன், அதன்பின்தான் மோகன் சி. லாசரஸ் தன் குருவின் **தவறான சாட்சியை** விளங்கிக்கொண்டார் என்று நினைக்கிறேன்.

**இத்தனை சாட்சிகெட்ட காரியங்கள்** நல்ல ஊழியராக தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட **மரித்துப்போன** சகோ. D.G.S. தினகரன் வாழ்க்கையில் வந்ததின் காரணம், **யோனாவைப்**போல் கர்த்தர் சொன்ன ஊழியத்தை செய்யாமல் **வேறு இடத்துக்கு பயணம்** செய்ததால் அவர் சென்ற கப்பல் புயலில் சிக்கியது. வியாபாரிகள் வியாபாரத்துக்கு **கொண்டுபோன பொருட்கள் எல்லாம் கடலில் எறிந்து** யோனாவால் அவர்கள் பெரும் நஷ்டத்துக்குள்ளானார்கள். அதுபோலவே **சகோ. தினகரன்** அழைக்கப்பட்ட அழைப்பில் நிலைத்திராமல் ஊழிய வழியை **வியாபார ஊழியமாக** மாற்றிக்கொண்டாரே அதனால்தான் **மகள் மரித்தாள்,** கார் டிரைவர் மரித்தார், அப்போதும் தன் தவறை அவர் உணர்ந்து கொள்ளவில்லை.

**பாஸ்டர் சுந்திரம் ஆலோசனையை நிராகரித்தார்**

☐ **சென்னையில் பாஸ்டர் சுந்தரம்** அவர்கள் என்னிடம் பகிர்ந்துகொள்ளும்போது இப்படி சொன்னார், தம்பி ! நானும் அவர் (தினகரன்) வீடுதேடி சென்று கல்லூரி காரியத்தை குறித்தும், மகள் மரித்துப்போனதை குறித்தும் **எச்சரித்து வந்தேன்.** அவருக்கோ **கீழ்படிய மனமில்லை,** ஒருவன் **புகழ் ஏணியில் மிக உயரத்துக்கு போய்விட்டால் அவனுக்கு இறங்க மனம் வராது** என்று பாஸ்டர் சுந்தரம் கூறியது எத்தனை உண்மை. அந்த வார்த்தை எத்தனை அர்த்தமுடையது.

இரண்டு மாதத்துக்குமுன் ஜாமக்காரனில் **தன் சொந்த பிள்ளைகளுக்காக சாட்சியிழந்த** C.S.I. **பிஷப்மார்** என்ற தலைப்பில் கட்டுரை எழுதினேன். **இயேசு அழைக்கிறார்** ஊழியத்திலும் அதுதான் நடந்தது. தன் மகன் **பால் தினகரனை ஒரு தொழில் அதிபராக** ஆக்கும் நோக்கத்தில்தான் **காருண்யா கல்லூரியை** தொடங்கினார்.

அந்த நோக்கத்தில்தான் தன் **மகனை ஊழியத்தில்** பயன்படுத்த **வேதாகம கல்லூரிக்கு** அனுப்பாமல் **வியாபார படிப்பான** M.B.A. படிப்பை படிக்க வைத்தார்.

அதன்பிறகு கர்த்தர் சகோ. தினகரனுக்கு அடிமேல் அடி கொடுத்தார். இரண்டு முறை **இருதய ஆப்பரேஷனுக்காக** அமெரிக்கா சென்று பிழைத்து வந்தார். அப்போதும் அவர் தன் தவறான திட்டத்தை மாற்றிக்கொள்ளவில்லை.

**அடுத்த அடி கொஞ்சம் கடினமாயிருந்தது.** இரண்டு **கிட்னியும்** பழதடைந்து. பல லட்சங்கள் கொடுத்து கிட்னியை இரண்டு நபர்களிடம் விலைக்கு வாங்கியும் ஒன்றுகூட சகோ. தினகரனின் உடலோடு ஒத்துப்போகவில்லை. ஒரு கட்டத்தில் மரணத்தின் வாசல் வரை வந்துவிட்டார்.

சகோ. D.G.S. தினகரன் பிழைக்கமாட்டார் என்பதை அறிந்த Dr. பால் தினகரன் ஞானமாய் கையொழுத்து வாங்கவேண்டிய ஆவனங்களின் விஷயமாய் அனைத்து ஏற்பாடுகளை முடித்துக்கொண்டார். **வங்கி** மேலாளர், **அரசாங்க** அதிகாரிகள் சகோதரனின் நிலை உண்மைதானா, உயிரோடு இருக்கும்போது கையெழுத்து வாங்கப்பட்டதா, மரண தருவாயில் இருக்கிறாரா என்பதை நேரில் கண்டு உறுதிபடுத்தவேண்டும். ஆனால் அதற்குள் அவர் உயிர் பிரிந்தது. ஆனால் அதை யாருக்கும் அறிவிக்காமல் அவர் உயிரோடுதான் இருக்கிறார் என்ற தோற்றத்தை உண்டாக்க சகோதரன் தினகரனுக்கு **வெண்டிலேட்டர்** பொருத்தி வைத்தார்கள். சில அதிகாரிகள் ஆஸ்பத்திரிக்கு வருகை தந்தார்கள். அப்போது ICU அறையில் வெண்டிலேட்டர் பொருத்தியதால் மூச்சு இழுத்துவிடுவதைப்போல் காணச் செய்தார்கள். ICU கதவில் உள்ள கண்ணாடி வழியாக அதிகாரிகள் அதை பார்த்தபின் சகோ. தினகரன் உயிரோடுதான் இருக்கிறார். ஆகவே எழுதிய ஆவணங்கள் செல்லும் என்று அறிவிக்கப்பட்டது. அதிகாரிகள் சென்ற சில மணி நேரத்திற்குபிறகு 3வது நாள்தான் அவர் மரண செய்தி யாவருக்கும் அறிவிக்கப்பட்டது. மற்ற பத்திரங்கள் மாற்றும் வேலையெல்லாம் மிக சாதுர்யமாக நடந்தேறியது என்று அந்த ஆஸ்பத்திரியில் உள்ள நர்ஸ்கள் சிலர் அறிவித்ததாக கூறினார்கள். இப்படித்தான் சகோ. D.G.S. தினகரனின் மரண சம்பவம் நடந்தேறியது.

தகப்பன் **D.G.S. தினகரன்** மரித்தார்

மகன் **பால் தினகரன்** அகப்பட்டார்

2021 ஜனவரி மாதம் இந்தியா முழுவதும், வெளி நாடுகளிலும் இயேசு அழைக்கிறார் நிர்வாகி Dr. பால் தினகரன் வீட்டையும், காருண்யா கல்லூரியையும் **வருமானவரி துறை** – வெளி நாட்டு சம்மந்தமான **அமலாக்க துறையினரும்** சேர்ந்து சோதனை நடத்தினர். ஒரே

சமயம் **28 இடங்களில்** நடத்திய ரெய்டு மூலம் சுமார் **5 கிலோ தங்கம்** கண்டுபிடிக்கப் பட்டது. கர்த்தர் கட்ட சொன்னதாக அறிவிக்கப்பட்ட காருண்யா பல்கலை கழக (கெஸ்ட்ஹவுஸ்) **விருந்தினர் தங்கும்** அறையிலிருந்து சுமார் **120 கோடி** ரூபாய் **கணக்கில் காட்டப்படாத** பணம் சிக்கியதாக TVயிலும் அனைத்து தினசரி பத்திரிகைளிலும் புகைப்படத்தோடு வெளியிடப்பட்டது. சுகமளிக்கும் கூட்டங்களிலும், **இயேசு அழைக்கிறார் ஊழியத்துக்கும்** மக்கள் வாரி வழங்கிய **காணிக்கை** வெளிநாடுகளில் மீண்டும் **வியாபாரங்களில் முதலீடு** செய்ததற்கான **முக்கிய ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டது** என்று பத்திரிகை செய்தி கூறுகிறது.

☐ பால் தினகரனுக்கு இயேசு அழைக்கிறார் டிரஸ்ட் பெயரிலும், தன் சொந்த பெயரிலும், மனைவி பெயரிலும் சுமார் **200 வங்கிகளில் கணக்கு உண்டு** என்றால் யூகித்துக்கொள்ளுங்கள். எவ்வளவு பண புழக்கம் இருந்தால் 200 வங்கியில் கணக்கு இருக்கும்.

☐ 28 இடங்களில் சோதனை நடத்தியும், திறக்கப்படாத **அறைகள்** நிறைய உண்டு. திறக்க முடியாத **லாக்கர்** உண்டு. இதற்காக **பால் தினகரனின்** வரவுக்காக காத்திருக்கிறார்கள். அவரை விசாரனை நடத்தவும் அதிகாரிகள் **கனடா நாட்டில்** உள்ள பால் தினகரனுக்கு சம்மன் அனுப்பியிருக்கிறார்கள்.

***இரகசியங்கள் இதில் பல உண்டு ! கேள்விகளும் பல உண்டு !***

1) **கனடா நாட்டில்** இவர்கள் ஏன் சொந்த வீடு வாங்க வேண்டும்.
2) இந்தியாவில் பல **பங்களாக்கள்** இருக்க, இந்தியாவிலலேயே **ஊழியங்கள் நிறைய** இருக்கும்போது **கனடா நாட்டு பிரஜையாக** மாற நினைக்கும காரணம் என்ன ?
3) மூத்த மகளை ஏன் கனடாவில் குடியேர அனுப்பினார்கள் ?
4) ஊழியத்துக்காக அனுப்பட்ட காணிக்கையை **தங்க கட்டிகளாக** மாற்ற காரணம் என்ன?
5) இந்தியாவில் அதிகாரிகள் 28 இடங்களில் பரிசோதித்தபோது கோடிகளும், தங்க கட்டிகளும் கிடைத்தது.
6) உலக நாடுகளில் 8 தேசங்களில் உள்ள **ஜெப கோபுரங்களிலும்** அதை ஒட்டிய கட்டிடங்களிலும் இன்னும் **சோதனை நடத்தப்படவில்லை.**
7) **உலக நாடுகளுக்காக ஜெபிக்க** அந்தந்த நாடுகளில் **ஜெப கோபுரங்கள்** என்ற பெயரில் பல மாடி கட்டிடங்கள் வாங்கப்பட்டது. கட்டப்பட்டுள்ள அந்த பல மாடி கட்டிடங்களில் ஜெபிக்க என்று **ஒரே ஒரு அறை மட்டும் உபயோகிக்கப்படுகிறது.** ஆனால் மீதி கட்டிடங்கள் யாவும் பெரிய தொகைக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

குடியிருக்கும் கம்பெனிகளிடம் **அட்வான்ஸ்** பணமாக வாங்கப்பட்ட தொகையோ **கோடிக்கணக்கில் ஆகும்.** ஒரு **ஜெப கோபுரத்தில்** மட்டும் **மில்லியன்** கணக்கில் **வருமானம்** வருகிறதாக கூறப்படுகிறது.

குறிப்பாக **எருசலேமில்** (இஸ்ரேல் தேசம்) இடம் வாங்குவது என்பது மிக கடினம். உலகில் மிகப் பெரிய பணக்காரர்கள்கூட எருசலேமில் இடம் வாங்க யோசிக்கிறார்கள். ஆனால் **இயேசு அழைக்கிறார்** ஜெப கோபுரம் என்ற பெயரில் வாங்கப்பட்ட நிலத்தின் விலை, அதில் கட்டப்பட்ட 17 அடுக்குமாடி வீடுகள் அதை கட்டப்படுவதற்கு செலவழிக்கப்பட்ட **பணம் மில்லியன்** கணக்கில் அல்ல Bபில்லியன் கணக்கில் என்று கூறுகிறார்கள் என்றால், அந்த கட்டிடத்தில் வரும் வாடகை அளவு சாதாரணமானதல்ல.

அந்த கட்டடத்தில் உள்ள **ஜெப கோபுர ஜெப அறை** ஒன்றுக்கு மட்டும் **வாடகை இல்லை.** அந்த 17 மாடி கட்டிடத்தில் பாதி **புனித யாத்திரை** பெயரில் வரும் டூரிஸ்டுகள்தங்க ஏராளமான (லாட்ஜ்) **அறைகள்** கட்டப்பட்டுள்ளன. **ஒரு குறிப்பிட்ட மாடியில்** உலக நாடுகள் தரத்தில் உள்ள **உணவு விடுதி** – அந்தந்த நாட்டினர் சாப்பிடும் **பல நாட்டு உணவு வகைகள்.** அங்கு பரிமாரப்படும் **Restaurent** உணவு விடுதியும் உண்டு. மறுபக்கம் உள்ள **கட்டிடங்கள் யாவும்** பல்வேறு **உலக வியாபார பெரிய கம்பெனிகளின்** அலுவலகம் அமைந்துள்ளது. அதில் **உலக வங்கி** ஒன்று இயங்குகிறது. இவைகளின் **வாடகை** வருமானம் எத்தனை **Bபில்லியன்** என்று யாராலும் கூறமுடியவில்லை. நமக்கு **ஒரு லட்சத்துக்கு** எத்தனை சைபர் என்று தெரியாத நிலையில் **கோடிக்கு** எத்தனை **சைபர்,** மில்லியனுக்கு எத்தனை சைபர் மில்லியனைவிட Bபில்லியன் என்பது மிகப்பெரிய தொகை, இவைகளை கேட்கும்போதே தலை சுற்றுகிறது. இத்தனை **வருமானத்துக்கும்** கணக்கு என்ன? இத்தனை பெரிய வருமானத்தில் வரும் பெரும் லாப பணத்தை இவர்கள் என்ன செய்கிறார்கள் ?

இவர்கள் உண்மையாக ஊழியம் செய்கிறார்கள் என்று நம்பி கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்திலிருந்து கொடுத்த பணத்தை இப்படி வியாபாரத்தில் போட்டு சம்பாதிக்கிறார்களே ! இயேசு சொன்னார், ராயனுடையதை ராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் கொடுங்கள் என்று கூறி இயேசுவும் அரசாங்கத்துக்கு வரி கட்டினாரே. அனால் இவர்கள் அரசாங்கத்துக்கு கணக்கு காட்டாமல் வீட்டில் பணத்தை பதுக்கி வைத்துள்ளதைதானே அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளார்கள்.

அதனால்தான் **இந்தியாவின் பணக்காரர்கள்** லிஸ்டில் Dr. **பால் தினகரன் 3ம் இடத்தில் இருக்கிறார்** என்றால். வருமானவரி துறையும், இந்திய மத்திய அமைச்சரகமும் சும்மா பார்த்துக்கொண்டிருக்குமா ?

**ஜெப கோபுரம்** என்ற பெயரில் மக்களிடம் வாங்கிய காணிக்கைகள் வெளிநாட்டு வியாபார முதலீடாக மாறியுள்ளது என்று பத்திரிகைக்காரர்கள் எழுதியுள்ளது உண்மைதானே!

Dr. பால் தினகரன் ஜெபிக்கிறவர் என்று நம்பி காணிக்கை கொடுத்தவர்கள் அனைவரும் இப்போது புலம்புகிறார்கள்.

இவரின் தகப்பனார் D.G.S. தினகரன் ஜெபத்துக்கு 2000 வாங்கினார், பால் தினகரன் ஜெபத்துக்கு 5000 வாங்குவதாக அவர்களின் வாட்ஸ் ஏப்பிலும், மற்ற You-Tube விளம்பரத்திலும் காணலாம் என்று அறிவிக்கிறார்கள். ஜெபத்தை இப்படி விலைக்கு விற்கும் இப்படிப்பட்ட கள்ள தீர்க்கதரிசன வியாபாரிகளை இன்னும் நம்பிக்காண்டிருக்கும் கிறிஸ்தவர்களைப்பற்றி என்ன சொல்ல.

கடந்த இரண்டு நாட்களாக **எஸ்தர்** ஜெபக்குழு **இயேசு அழைக்கிறார்** ஜெபக்குழு, **ஜெப கோபுர** ஜெப குழுவினர். கர்த்தாவே உமது ஊழியக்காரன் பால் தினகரன் ஜெயிலுக்கு போக அனுமதிக்காதிரும் என்று கூறி, ஜெபம் செய்து, சாப்பிடாமல் அழுதுக்கொண்டிருப்பதாக அறிந்தேன். தயவுசெய்து அப்படி ஜெபிக்க வேண்டாம். பால் தினகரன் குடும்பம் **இரட்சிக்கப்பட வேண்டும் மனம் திரும்ப வேண்டும்** என்று ஜெபியுங்கள்.

அவர் **ஜெயிலுக்கு போகமாட்டார்,** கோயமுத்தூரில் மட்டும் அவருக்கு **3 ஆடிட்டர்கள்** உண்டு. அதில் ஒருவர் ஜாமக்காரன் வாசகர். அவர் இரட்சிக்கப்பட்டவர் 200 (Bank) வங்கிகள், பல **நூறு வியாபார ஸ்தாபனங்கள்** 28 இடங்களில உள்ள இருப்பிடம், **மற்ற ஸ்தாபனங்களுக்கு** எல்லாம் **தனித்தனி ஆடிட்டர்கள்** என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். சட்டத்தில் **பல ஓட்டைகள் உண்டு. அந்த ஓட்டை வழியே** பால் தினகரன் **நிச்சயம் தப்பித்துவிடுவார்.** ஆகவே அவர் **ஜெயிலுக்கு போகமாட்டார்,** ஆனால் 80% **அபராத தொகையை** GST வரிகளோடு அடைத்து விட்டு மறுபடியும் **இயேசு அழைக்கிறார்** ஊழியத்தை தொடங்கிவிடுவார். **ஏமாருவதற்கும்,** மறுபடியும் **காணிக்கை அனுப்புவதற்கும் திருநெல்வேலியிலும், கன்னியாகுமரி, நாகர்கோவில்** பகுதிகளிலும் இவருடைய விசிரிகள் ஏமாளி **கிறிஸ்தவர்கள்** கையில் காணிக்கை வைத்துக்கொண்டு தயாராக இருக்கிறார்கள். இவ்வளவு சம்பவங்கள் நடந்தும் மறுபடியும் காணிக்கை அனுப்பத்தான் செய்வார்கள்.

நம் கிறிஸ்தவர்களின் **முட்டாள்**தனத்தையும் **ஏமாளி** குணத்தையும் கண்டு வருந்துகிறேன். இவர்களை நம்பித்தான் **ஜெபத்தில் பெயர் சொல்லும்** கள்ள ஊழியர்கள் பெருகி வருகிறார்கள்.



Er. Mathew Abraham

# மரண அறிவிப்பு

சகோ. Er. Mathew Abraham (ABY) 60வயது டிரைபல் மிஷன் பொருளாளர் கர்த்தருக்குள் தன் ஆவிக்குறிய ஓட்டத்தை வெற்றிகரமாக முடித்தவர்.

இவர் தகப்பனார் டிரைபல் மிஷன் ஊழியத்தில் ஆரம்பகால முக்கிய தூன்களில் ஒருவராகஇருந்தவர் அவர் பெயர் Mr. **ஆபிரகாம் வர்கிஸ்** ஆகும். சகோதரன் அவர்கள் **டிரைபில் மிஷன்** நிதி **செயலாளராகவும்.** டிரைபல் மிஷன் **தலைவராவும்** பொறுப்பேற்று எந்தவித பிரச்சனைகளும் இல்லாமல் டிரைபல் மிஷன் ஊழியத்தை நடத்தி முன்னுக்கு கொண்டு வந்தார்.

இவருடைய மகன் படத்தில் உள்ளவர் சமீபத்தில் விபத்தில் மரித்த என்ஜினியர் **மேத்யூ ஆபிரகாம்** என்பவராகும். இவருடைய **தாத்தாவும்** அந்த காலத்திலேயே **மிஷனரி** டீச்சராக பெரும்பாவூர் கவர்மெண்ட் பள்ளியில் பணியாற்றி, **மிஷனரி ஊழியத்தையும்** நிறைவேற்றிய திரு. **பந்தலம் வர்கிஸ்** என்பவராகும், இவரும் தன் அரசாங்க வேலையை ராஜினாமா செய்து Aimury, Iringole, Keezhillam போன்ற பல ஊர்களில் **மிஷனரி ஊழியத்தையும் சுவிசேஷ ஊழியத்தையும் நிறைவேற்றி கர்த்தரின் பாதத்தில் சேர்ந்தார்.** அவர் பெற்ற **பிள்ளைகள் யாவரும்** தாத்தாவை பின்பற்றி **மிஷனரி ஊழியத்தை** தாங்கியவர்காளாகும். அந்த பரம்பரையில் வந்தவர்தான் **டிரைபல் மிஷன்** குடும்பத்தில் ஒருவரான கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் மரித்தவரான **Er. மேத்யூ ஆபிரகாம்** அவர்கள் ஆகும். இவர் சமீபத்தில் நடந்த பொதுக்குழுவில் டிரைபில் மிஷன் **நிதி செயலாளராக** Finance Secretary யாக தெரிந்தெடுக்கப்பட்டவராகும்.

இவர் கல்லூரியில் பயிலும்போது **எஞ்ஜினியரிங்** கல்லூரியின் முதல் மாணவராக அதிக மார்க்கில் தேரியவராகும். ஆகவே கேரள கவர்மெண்டில் PWD பொது துறையில் **அரசாங்க இஞ்ஜீனியராக** வேலை கிடைத்தது , அந்த குறிப்பிட்ட PWD டின்பார்ட்மென்டில் **லஞ்ஜம்** வாங்கவேண்டியிருக்கும் என்று அந்த அரசாங்க வேலையில் அவர் சேரவில்லை. அந்த வேலை வேண்டும் என்பதற்காக பல லட்சங்கள் லஞ்ஜம் கொடுத்து கார்த்திருந்தவர்கள்

ஏராளம், இவருடைய திறமையும் மார்க்குகளை பார்த்து **கேரள அரசாங்கமே** அவரை அழைத்து என்ஜினியர் வேலை கொடுத்தது. அந்த அரசியல் ஊழல் நிறைந்த அந்த உயர்ந்த பதவியை கர்த்தருக்காக **சாட்சியுடன் வாழ** வைராக்கியமாக அந்த வேலையை உதரி தள்ளியவர் ஆகும்.

சில மாதங்களிலேயே Bahrain என்ற அரபு நாட்டில் வேலை கிடைத்தது. பல ஆண்டுகள் அங்கு பணிபுரிந்து இந்தியா திரும்பியவுடன் **டிரைபில் மிஷன்** ஊழியத்தில் பங்குகொண்டு பல ஆதிவாசி கிராமங்களை சந்தித்து சுவிசேஷம் அறிவித்து அதே **டிரைபல் மிஷன்** ஸ்தாபனத்தின் **பொருளாளராக** (நிதி செயலராக) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால் கடந்த 2020 **நவம்பர்** மாதம் முதல் தேதியில் யாரும் எதிர்பாராமல் நடந்த விபத்தில் உயிர் இழந்து கர்த்தரின் பாதத்தில் சேர்ந்தார். அவர் மரணம் டிரைபில் மிஷனுக்கு பெரிய இழப்பாகும். எங்கள் **டிரைபல் மிஷன் குடும்பத்தில் ஒருவரை இழந்தோமே** என்ற துக்கம் எங்களை விட்டு இன்னும் மாறவில்லை.

ஆனால் அவர் **குடும்பம் முழுவதும் மிஷனரி** ஊழியம் செய்த பரம்பரையாகும். மூன்று தலைமுறையாகசெய்து வந்த மிஷனரி ஊழியம் மரித்த **மேத்யூ ஆபிரகாம்** (ABY) வரை தொடர்ந்தது. அது ஒரு பெரும் **சாட்சியாகும்.** அவருடைய வாழ்க்கைக்காக கர்த்தரை துதிக்கிறேன்.

## ONLINE BANKING (NEFT)

**Dr. M.G.E. PUSHPARAJ**, **SALEM - 636 005. INDIA**

**STATE BANK OF INDIA** (SALEM-1970)

**A/C No: 10764116842** SWIFT CODE - SBININBB637- 10764116842
IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

**A/C No: 1219101013622.** SWIFT CODE - CNRB0001219 -1219101013622.
IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622.



## வாழ்க்கிறோம் ! வரவேற்கிறோம் !!

### மத்திய கேரள C.S.I. டையோசிஸ்க்கு புதிய பிஷப் தெரிந்தெடுக்கப்பட்டார்

கேரளாவில் மலையாள பாஷை CSI யில் மொத்தம் 6 டையோசிஸ்கள் உண்டு. அதில் பிரதானமான டையோசிஸ் **மத்திய கேரள** CSI டையோசிஸ் ஆகும். 2021 **ஜனவரி** மாதம் 17ம் தேதி **Rev. Dr. சாபு K. செரியான்** (வயது 59) என்பவர் **பிஷப்பாக** தெரிந்தெடுக்கப்பட்டார். இவர் மிக அதிகம் படித்தவர், ஏழைகள், தொழிலாளிகள் இப்படிப்பட்டவர்கள்மேல் கரிசனை உள்ளவர். பொதுவாக சமூக சேவைகளில் நாட்டம் கொண்டவர்.

கேரளாவில் **கோட்டயம்** நகரை மையமாகக்கொண்டு இயங்குகின்ற இந்த டையோசிஸ்க்கு புதிதாக தெரிந்தெடுக்கப்பட்ட **பிஷப் Rt. Rev. Sabu K. Cheriyan** அவர்களை **என் பெயரிலும்** கேரளாவிலுள்ள மலையாள **ஜாமக்காரன்** வாசகர்கள் பெயரிலும் வாழ்த்துகிறோம். **நவீன உபதேசங்களை** சபையில் நுழைக்காமல், சபைகளை **வசனத்தின்** அடிப்படையில் புதிய பிஷப் அவர்கள் நடத்துவார் என்று நம்புவோம், ஜெபிப்போம். கர்த்தர் தாமே மத்திய கேரள CSI டையோசிஸ் அங்கத்தினர்கள் இந்தியா, வெளி நாடுகளில் வாழும் அந்த டையோசிஸ் சபை மக்களை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

– ஜாமக்காரன்

**DECEMBER-2020**

# Printed Book (Periodical)


**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**


**Return Requested:**


**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**



Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.